பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

04 12 2024 **WEDNESDAY** **7.15 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. கடல்சார் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக கடற்படையினர் ஆற்றிவரும் பணி பாராட்டுதலுக்குரியது என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

2. ரயில்வேத்துறைக்கான நிதி ஒதுக்கீடு வெகுவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

3. மகாராஷ்ட்ரா முதலமைச்சராக திரு தேவேந்திர பட்நாவிஸ் நாளை பதவியேற்கிறார்.

4. தமிழகம், மழை வெள்ள பாதிப்பிலிருந்து விரைவில் மீளும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

5. 19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில், இந்தியா 10 விக்கெட் வித்தியாசத்தில் ஐக்கிய அரபு எமிரேட்டை வென்றது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<<<>>>>>>

நாட்டை பாதுகாப்பதில் கடற்படையினர் ஆற்றிவரும் பணி பாராட்டுதலுக்குரியது என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

கடற்படை தினத்தையொட்டி இன்று பூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

1971-ஆம் ஆண்டின் போர் வெற்றியை குறிக்கும் வகையில் இந்த தினம் கொண்டாடப்படுவதாக அவர் கூறினார்.

தன்னலமற்ற சேவையை கடற்படையினர் ஆற்றிவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நாளில் கடற்படையினர் அனைவருக்கும் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதாகவும் திருமதி திரௌபதி முர்மு கூறினார்.

<<<<<<>>>>>>

இந்தியா – சீனா உடனான உறவு மேலும் வலுவடைய எல்லைப்பகுதியில் அமைதி நிலவ வேண்டியது அவசியமாகிறது என்று வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் சீனா உடனான உறவு குறித்து அறிக்கை தாக்கல் செய்து அவர் பேசினார்.

இருநாடுகளுக்கு இடையேயான பேச்சுவார்த்தையில் எல்லை நிர்வாகம் தொடர்பான அம்சங்களுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றார்.

எல்லைப்பகுதியில் கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதற்கு மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

எல்லையை பாதுகாப்பதில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் திரு ஜெய்சங்கர் திட்டவட்டமாக தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் ரயில்வேத்துறையில் இதுவரை இல்லாத அளவிற்கு மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் ரயில்வே சட்டத்திருத்த மசோதாவை தாக்கல் செய்து அவர் பேசினார்.

ரயில்வேத்துறைக்கான நிதி ஒதுக்கீடும் வெகுவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னர், இந்த துறைக்கான நிதி ஒதுக்கீடு 29 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு இருந்ததாகவும், தற்போது இது 2 லட்சத்து 52 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

கடந்த பத்தாண்டுகளில் 44 ஆயிரம் கிலோமீட்டர் தொலைவு ரயில் வழித்தடங்கள் மின்மயமாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ரயில்வே நிர்வாகத்தை மேலும் செம்மைப்படுத்தும் நோக்கில் இந்த மசோதா கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<<>>>>>>

விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைக்கு தீர்வுகாண மத்திய அரசு தயாராக இருப்பதாக வேளாண்துறை இணையமைச்சர் திரு **Bhagirath Chaudhary** கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், விவசாயிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த அரசு எப்போதும் தயாராக இருப்பதாக கூறினார்.

<<<<<<>>>>>>

பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதற்கென தேசிய இயக்கம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் கால்நடை பராமரிப்புத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக செயல்படுத்தப்பட்ட திட்டங்களும் அதில் பட்டியலிடப்பட்டுள்ளது.

இதற்காக, தமிழகத்திற்கு மட்டும் இதுவரை 19 ஆயிரத்து 710 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

நாடு முழுவதும் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட கிராம பஞ்சாயத்துகளுக்கு இணையதள சேவை வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

பாரத் நெட் திட்டத்தின்கீழ் இந்த சேவை வழங்கப்படுவதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

எஞ்சியுள்ள 3 லட்சத்திற்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு தேவை அடிப்படையில் இணையதள சேவை வழங்கப்படும் என்றும், இதற்காக ஒரு லட்சத்து 39 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

மகாராஷ்ட்ரா முதலமைச்சராக திரு தேவேந்திர ஃபட்நாவிஸ் நாளை பதவியேற்கிறார்.

மும்பையில் நடைபெற்ற பிஜேபி சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டத்தில் அதன் குழு தலைவராக திரு பட்நாவிஸ் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதனைத்தொடர்ந்து, திரு ஃபட்நாவிஸ், கூட்டணி கட்சித்தலைவர்களோடு இணைந்து, ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணனை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார்.

இதனை ஏற்றுக்கொண்ட ஆளுநர், புதிய அரசு அமைக்குமாறு திரு தேவேந்திர பட்நாவிஸுக்கு அழைப்பு விடுத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு தேவேந்திர பட்நாவிஸ், நாளை மாலை ஐந்தரை மணியளவில் பதவியேற்பு விழா நடைபெறும் என்று கூறினார்.

அமைச்சர்கள் பட்டியல் இன்றிரவுக்குள் இறுதி செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பதவியேற்பு விழாவில் பிரதமர் திரு நரேந்திர மோடி மற்றும் தலைவர்கள் பலர் பங்கேற்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

ஜார்கண்ட் அமைச்சரவை விரிவாக்கம் நாளை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

11 புதிய அமைச்சர்கள் பதவியேற்க உள்ளதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

ராஞ்சியில் நாளை நண்பகல் பனிரெண்டரை மணியளவில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில், ஆளுநர் திரு சந்தோஷ் குமார் கங்வார் அவர்களுக்கு பதவி பிரமாணம் செய்துவைக்க உள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

11 அமைச்சர்களில் ஆறு பேர் ஜார்கண்ட் முக்திமோர்ச்சா-வை சேர்ந்தவர்கள் என்றும், நான்கு பேர் காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்கள் என்றும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

தமிழகம் மழை வெள்ள பாதிப்பிலிருந்து விரைவில் மீளும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார். இன்று சென்னையில் பல்வேறு வளர்ச்சித்திட்டப்பணிகளை தொடங்கிவைத்து அவர் உரையாற்றினார்.

<<<<<<>>>>>>

குமரி முனையில் உள்ள திருவள்ளுவர் சிலை வெள்ளி விழாவையொட்டி, தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் திருக்குறள் போட்டி நடத்தப்பட உள்ளதாக மாநில அரசு அறிவித்துள்ளது.

கவிதை, கட்டுரை, குறும்படம், செல்ஃபி மற்றும் திருக்குறள் ஒப்புவித்தல் போன்ற போட்டிகள் நடத்தப்பட உள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதில் பங்கேற்க விரும்புபவர்கள் தங்களது படைப்புகளை வரும் 18-ஆம் தேதிக்குள் **tndiprmhkural@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரியில் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

இணையதள நிதி முறைகேடு தொடர்பான வழக்கில் தில்லி உட்பட 10 இடங்களில் சிபிஐ இன்று சோதனை மேற்கொண்டது.

117 கோடி ரூபாய் அளவிற்கு நிதி முறைகேடு தொடர்பான புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட வழக்கின்கீழ், இந்த சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக சிபிஐ தெரிவித்துள்ளது

இந்த சோதனையின்போது பல்வேறு ஆவணங்களும், மின்னணு கருவிகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில், இந்தியா 10 விக்கெட் வித்தியாசத்தில் ஐக்கிய அரபு எமிரேட்டை வென்றது.

ஷார்ஜாவில் நடைபெற்ற இப்போட்டியில், டாஸ் வென்று முதலில் பேட் செய்த ஐக்கிய அரபு எமிரேட் தொடக்கம் முதலே விக்கெட்டுகளை இழக்கத்தொடங்கி, 44 ஓவரில் 137 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக முகமது ரயான் 35 ரன் எடுத்தார்.

**Yudhajit Guha** அபாரமாக பந்துவீசி மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

138 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த இந்தியா, அதிரடியாக ஆடி 16 புள்ளி ஒரு ஓவரிலேயே விக்கெட் இழப்பின்றி 143 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

**Ayush Mhatre** 51 பந்துகளில் 67 ரன்னும், **Vaibhav Suryavanshi** 46 பந்துகளில் 76 ரன்னும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

--------------

செவி திறன் குறைபாடுடையவர்கள் பங்கேற்ற ஆசிய பசிபிக் விளையாட்டுப் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெள்ளிப் பதக்கங்களை வென்றது.

மலேசியாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் தொடர் ஓட்டத்தில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

ஆடவர் பிரிவு ஈட்டி எறிதலில் ரமேஷ் குமார் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

மகளிர் டேபிள் டென்னிஸ் பிரிவில் இந்தியாவிற்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது.

-----------------

குவஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Tanvi Sharma,** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 21-18, 21-14 என்ற செட் கணக்கில், **Tanya Hemanth**-ஐ வென்றார்.

இதர ஒற்றையர் பிரிவு ஆட்டங்களில் **Tharun Mannepalli,** பிரியன்ஷு ரஜாவத், **Anmol Kharb,** ஆகியோர் வெற்றிபெற்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

-------------

ஆசிய கோப்பை ஜுனியர் ஹாக்கிப்போட்டி இறுதியாட்டத்தில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

<<<<<<END>>>>>>